**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 - 2022**

விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பீ.3 இன் II ஆம் பிரிவின் 2 ஆம் பட்டியலுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சிறுதொழில் விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை அதிகரித்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். முதலீட்டு தயார்படுத்தல் உதவி, விவசாயி உற்பத்தியாளர் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மானியங்களை இணைத்தல் மற்றும் பகுதியளவு கடன் உத்தரவாதம் எனும் பெயரிலான 03 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுலப்படுத்தப்படுகின்றன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,612.28 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 106.97 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,175.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.87 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 6,436.40 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 44.10 மில்லியன் மிகுதித் தொகை பயனாளிகளினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் பின்னோக்கி நிதியளித்தலின் கீழ் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 15 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2024 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | மொத்தம் ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மதிப்பிடப்பட்ட பயனாளிகளின் பங்களிப்புக்கள் உரிமையாண்மையின் கீழ் காட்டப்படாமல் பொறுப்புக்களின் கீழ் பிழையாக காட்டப்பட்டுள்ளது. | 16,566 | தொடர்புடைய செலவுப் பதிவு பயனாளிகளின் பங்களிப்பு மற்றும் மானியப் பயன்பாடாகக் காட்டப்பட்டுள்ளதுடன் இது 2023 நிதியாண்டிலிருந்து உரிமையாண்மையாக காட்டப்பட முடியும். | நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முன்வைக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உலக வங்கியின்/ஐடிஏவின் 39.8 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு மீதி , அறிக்கையிடப்பட்ட திகதியில் எல்கேஆர் மதிப்பில் மாற்றப்பட்டிருக்காததுடன் இதன் விளைவாக நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த கடன் மீதி மற்றும் செயற்திட்டச் செலவு மீதி என்பன குறைத்து காடப்பட்டிருந்தன. | 6,830 | இந்த சீராக்கம் கடந்த ஆண்டுகளில் செய்யப்படவில்லை மற்றும் இந்த கணக்காய்வின் போது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது .அதன்படி, 2023 நிதியாண்டில் சீராக்கம் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகள் பேணப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களச் சுற்றறிக்கை | உள்ளகக் கணக்காய்வு குழுக் கூட்டம் காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் ஒரு கூட்டமேனும் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | இச் செயற்திட்டம் அவ்வப்போது பல அமைச்சுக்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அந்த அமைச்சுக்களால் நடாத்தப்படும் அனைத்து கணக்காய்வு குழுக் கூட்டங்களிலும் பங்கேற்பு பேணப்பட்டு வருகின்றது. தற்போது, செயற்திட்டத்திற்காக ஒரு தனி கணக்காய்வு குழு கூட்டம் நடாத்தப்படுகிறது. | சுற்றறிக்கையின் பிரமாணங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம் மற்றும் இலங்கை கணகீட்டு நியமம் 19 இன் பிரகாரம் | செயற்திட்ட ஊழியர்கள் சேவையை விட்டு வெளியேறியதன் பின்னர் வழங்க வேண்டிய பணிக் கொடைகளுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 கணக்குகளில் திருத்தப்படும். | இலங்கை கணகீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் பேணப்பட வேண்டும். |

**03. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்**

| | கூறு | | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இணை மானியங்கள் | (i) | பின்வரும் செயற்திட்ட நோக்கங்கள் தொடர்பாக சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் வழங்கப்பட்ட செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முடியவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2023 ஏப்ரல் 30 இல் 55 சதவீதத்திற்கும் குறைவான இலக்கை எட்டிய நான்கு நோக்கங்களை 5 வருட செயற்திட்ட காலத்திற்குள் அடைவதற்கு முடியாதிருந்ததுடன் அடுத்த ஒன்றரை வருடத்தில் அந்த நோக்கங்களை அடைய முடியுமா என்பது கணக்காய்விற்கு நிச்சயமற்றதாக இருந்தது. | 2023.04.30 இல் முடிக்கப்பட்ட துணைத் திட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மட்டுமே குறிப்பிடப்பட்ட நான்கு பீடிஓக்களின் முன்னேற்றம் தீர்மானிக்கப்பட்டது. 2023.04.30 இற்குள் முடிக்கப்பட்ட துணைத் திட்டங்களின் எண்ணிக்கை 630 ஆகும். மீதமுள்ள 758 துணைத் திட்டங்கள் உள்ளன. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவு செய்வதற்காக மேற்கூறிய குறிகாட்டிகளை (PDOs) கணக்கிடுவதற்காக மொத்த துணைத் திட்டங்களின் 55 சதவீதத்தை மீளாய்வு செய்யப்பட்டது. கோவிட் -19 தொற்றுநோய் மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடியுடன் தொடர்புடைய தொடக்க தாமதங்கள் மற்றும் சவால்கள் காரணமாக அந்த 4 PDO குறிகாட்டிகள் பின்தங்கியுள்ளன, ஆனால் 2023இன் 2வது காலாண்டில் இருந்து படிப்படியாக முன்னேற்றம் காணப்பட்டது. 758 துணைத் திட்டங்கள் முடிவடைந்துள்ளதால், இன்னும் 20 மாதங்களில் இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றமானது PDO களின் இறுதி இலக்குகளை அடையக்கூடியதாக இருக்கும். | விரும்பிய இலக்குகளை அடையும் வகையில் செயற்திட்டம் செயற்பட வேண்டும். |
| | | (ii) | செயற்திட்டத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளின் பலவீனம் காரணமாக, முதலீட்டாளர்களுக்கு செயற்திட்டத்தின் மூலம் இணை மானியத்தின் முதல் தவணையாக வழங்கப்பட்ட 263 முதலீட்டாளர்களுக்கு இரண்டாவது தவணையாக ரூபா 1,023 மில்லியன் வழங்கப்படுதலானது செயற்திட்டம் தொடங்கப்பட்ட திலிருந்து 2022 திசெம்பர் 31 வரை | இது முக்கியமாக முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகள் காரணமாகும். திட்டத்தின் 1 வது தவணையில் நடைபெற்று வரும் பணியின் அடிப்படையில் 2 வது தவணையை வெளியிடுவது மாறுபடுவதுடன் மற்றும் இணை சதவீதங்கள் (மானியம் மற்றும் சொந்த பங்களிப்பு) பூர்த்தி செய்யப்படும் வரை நிதி மேலும் வெளியிடுவதானது நடைபெற மாட்டாது. | குறிப்பிட்ட காலத்திற்குள் விரும்பிய இலக்குகளை அடையும் வகையில் செயற்திட்டம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தாமதமானது. மேலும், முதல் தவணை மற்றும் இரண்டாவது தவணை வழங்கப்பட்ட 249 முதலீட்டாளர் களுக்கு மூன்றாவது தவணையாக செலுத்த வேண்டிய ரூபா 389 மில்லியன் வழங்கப்படுதலானது செயற்திட்டம் தொடங்கப்பட்டதி லிருந்து 2022 திசெம்பர் வரை தாமதமானது. | | |
| (iii) | செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன் செயற்திட்டம் 2022 திசெம்பர் இற்குள் முடிக்கப்பட வேணடியிருந்தது. இருப்பினும் திட்டத்தின் காலம் 2024 யூன் வரை நீட்டிக்கப்பட்டது. இணை மானியம் செலுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தின்படி, 2024 யூன் இற்குள் தொடங்கப்படாத 1,405 செயற்திட்டங்களுக்கு இணை மானியமாக ரூபா 3,727 மில்லியன் செலுத்துவதற்கு இயலாது என்பது அவதானிக்கப்பட்டது. | 2023 ஏப்ரல் 30 இல் செலுத்தப்பட வேண்டிய மீதமுள்ள இணை மானியம் ரூபா 3,727 என கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்குப் பதிலாக ரூபா 3,015 மில்லியன் ஆகும். இன்றுவரை உள்ள மொத்த துணை திட்டங்களின் எண்ணிக்கை 1388 மட்டுமே ஆகும். 2023 யூன் 30 இல் நிலவரப்படி, PMU ஏற்கனவே ரூபா 236.3 மில்லியன் இணை மானியத்தை வழங்கியுள்ளது. இவ்வாறு வழங்கப்பட வேண்டிய மொத்தப் இணை மானியம் ரூபா 2779 மில்லியன் , இந்த தொகையில் ரூபா 620.7 மில்லியன். 12 பெரிய நுழைவாயில் செயற் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதைச் செயற்படுத்தத் தொடங்குவதற்கு வரிசை அமைச்சுடன் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. PMU மீதமுள்ள இணை மானியத் தொகையான ரூபா 2158.3 மில்லியனை 2024 யூன் 30 இற்குள் அதாவது 2024 திசெம்பர் 31 செயற்திட்ட நீட்டிப்பு திகதிக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. | குறிப்பிட்ட காலத்திற்குள் விரும்பிய இலக்குகளை அடையும் வகையில் செயற்திட்டம் செயற்பட வேண்டும். |
| (iv) | EOI/2020/03/771 இன் கீழ் 2021 மே 19 மற்றும் 2022 மார்ச் 02 அன்று ஒரு ஆலைக்கு ரூபா 4 மில்லியன் இணை மானியத் தொகை வழங்கப்பட்டது, 2022 திசெம்பர் 31 இல் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்க வில்லை. | கலானா ∴பைபர் மில் (பிரைவேட்) லிமிடெட்டின் வணிகச் செயல்பாடு 23/01/2023 அன்று தொடங்கப்பட்டதுடன் உற்பத்தி செயல்முறை வெற்றிகரமாக நடைபெற்று வருவதை அவதானிக்க முடிந்தது. | நிதி திறமையாக பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (v) 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 85.72 மில்லியன் இணை மானியங்கள் சில நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவை தமது செயற்திட்டங்களை கைவிட்டிருந்தன. மானியங்கள் திரும்பப் பெறப்பட வேண்டிய போதிலும், ரூபா 49.48 மில்லியன் மட்டுமே மீளாய்வாண்டின் இறுதியில் திரும்பப் பெறப்பட்டிருந்தது. மீதித் தொகை ரூபா 36.25 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் மீளப் பெறப்பட வேண்டியதாக இருந்தது. | 4 ஆதரவாளர்களிடமிருந்து மீதித் தொகையான ரூபா 36.997 மில்லியனை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி திறமையாக பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | கொத்தணி செயற்திட்டங்கள் | (i)பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 2019/021/1/02-04 இன் மூலம் 41 கொத்தணி செயற்திட்டங்களை செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் FPG/CO/2022/2/24 ஆம் இலக்கம் கொண்ட கொத்தணி செயற்திட்டம் மட்டுமே செயற்படுத்தப்பட்டது. | PMU ஆல் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட, பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 2019/021/1/02/-04 ஆனது தென்னை பயிர்ச்செய்கை சபை (CCB) மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள தென்னை அபிவிருத்தி அதிகாரசபை (CDA) ஆகியவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைநதிருந்தது. ‘கப்ருகா சொசைட்டிகளின்’ கீழ் 41 கொத்தணி திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் CCB/CDA ஆல் பரிந்துரைக்கப்பட்ட ஒரே ஒரு கொத்தணி பிரிவை மட்டுமே செயற்படுத்த முடிவு செய்யப்பட்டது, அதாவது FPG/CO/2020/2/24. | இலக்குகளை செயற்திறனாக மற்றும் திறம்பட அடைவதற்கு செயற் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| | | (ii)பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 2019/021/1/02/-04 இன் கீழ், FPG/CO/2020/2/24 கொத்தணி செயற்திட்டத்தின் மூலம் பழந்திரியகொட ஏகமுத்து கப்ருக சங்கத்தின் 50 உறுப்பினர்களுக்கு ரூபா 700,000 மதிப்புள்ள கயிறு அரைக்கும் இயந்திரங்களை வாங்குவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் 2020 நவம்பர் 25 அன்று தலா ரூபா 120,000 என அங்கீகரிக்கப்பட்ட குழுக்களுக்கு அதிகமாக 202 பேருக்கு | பழந்திரியகொட ஏகமுத்து கப்ருக சங்கத்திற்குச் சொந்தமில்லாத 50 உறுப்பினர்களுக்கு ரூபா 700,000 இணை மானியம் ஒதுக்கப்பட்டமை மற்றும் ரூபா 2,828,000 இணை மானியத்துடன் 202 உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பன விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை, அரை தானியங்கி நூல் தயாரிக்கும் இயந்திரங்களை வாங்குவதற்கு சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சபை ஆவணத்தை சமர்ப்பிக்கும் நேரத்தில், CCB/CDA மற்றும் கப்ருகா சங்கத்தின் மூலம் இந்த கொத்தணி செயற் திட்டத்தை செயல்படுத்துவதை மேற்பார்வையிட முடிவு செய்யப்பட்டது. தென் பிராந்திய இணை மானிய பிரிவின் பணிச்சுமையின் அளவைக் கருத்தில் கொண்டு, மானிய முகாமையாளர் முழு திட்டத்தையும் CCB/CDA இன் | சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மேற்பார்வையில் பணிகள் நடைபெற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 2 மில்லியன் செலவு வைக்கப்பட்டது. கயிறு தயாரிப்புகள் தொடர்பாக உருவாக்கப்பட்ட தொழில்முனைவோர் குழுவின் முன்னேற்றம் தென் மாகாண இணை மானிய முகாமையாளரால் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்படவில்லை. | மேற்பார்வைப் பணிகளுடன் ஒருங்கிணைத்தார். | |
| (இ) | பகுதியளவிலான கடன் உத்தரவாதம் | செயற்திட்டத்தின் பகுதியளவான கடன் உத்தரவாத கூறின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐ.அ.டொலர் 7.12 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் 2022 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் விளக்கங்களின்படி, உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் பிரதிநிதிகளுடன் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் நிர்வாக ஏற்பாடுகளில் உள்ள சிக்கல்கள் காரணமாக அந்தந்த வங்கிகளால் நடவடிக்கை தொடங்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் பகுதியளவிலான கடன் உத்தரவாதத்தின் கூறுகளின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ரூபா 7.12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கீடு இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தினால் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக வணிக வங்கிகள் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தத் தயங்குகின்றன. எனவே, ஒதுக்கப்பட்ட தொகை திருத்தப்பட்டு, மொத்த ஒதுக்கீட்டில், ரூபா 6.12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இணை மானிய செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டதுடன் மீதமுள்ள தொகை ரூபா 1.00 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். | விரும்பிய இலக்குகளை அடையும் வகையில் செயற்திட்டம் செயற்பட வேண்டும். |

### 3.2 குறைபயன்பாடுடைய வளங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 867,000 மேலதிக செலவில் செயற்திட்டத்தால் வாங்கப்பட்ட ஜிஐஎஸ் மென்பொருளைச் சேர்ந்த டெஸ்க்டாப் ஸ்பேஷியல் அனலிஸ்ட் எக்ஸ்டென்ஷன் மற்றும் டெஸ்க்டாப் 3டி அனலிஸ்ட் எக்ஸ்டென்ஷன் ஆகிய இரண்டு தொகுதிகளினதும் பயன்பாடு அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் அவை பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் உள்ளன. | 2017 ஆம் ஆண்டில், ASMP ஆனது GIS மென்பொருள் (ArcGIS டெஸ்க்டாப் உயர்தர உரிமம் 10.5.1) தொகுப்பை வாங்குவதற்குப் பதிலாக, இரண்டு நீட்டிப்புகளுடன் (டெஸ்க்டாப் ஸ்பேஷியல் அனாலிசிஸ் மற்றும் டெஸ்க்டாப் 3டி பகுப்பாய்வு) நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமான முழு தொகுதிக்குப் பதிலாகப் பெறுவதற்கு முடிவு செய்தது. செயற்திட்டத்தின் இறுதி கட்டத்தில் இரண்டு நீட்டிப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன. விரிவான பகுப்பாய்வைச் செய்வதற்கு இந்த இரண்டு நீட்டிக்கப்பட்ட தொகுப்புகளைப் பயன்படுத்துவது அவசியம். செயற்திட்டத்தின் பிற்பகுதியில் இரண்டு நீட்டிப்புகளை வாங்குவதற்கு நாம் திட்டமிட்டால், ஆரம்ப செலவை விட அதிக விலையுள்ள நீட்டிப்புகளைச் சேர்ப்பதற்காக ArcGIS இயங்குதளத்தை புதிய பதிப்பிற்கு மேம்படுத்த வேண்டி இருக்கும். | செயற்திட்டம் குறிக்கோளுடன் சீரமைக்கப்பட வேண்டும் மற்றும் தரவு அமைப்பு புதுப்பிக்கப்பட்ட நிலையில் பயன்படுத்தப்பட வேண்டும். |

<table>
<tr>
<td>(ஆ)</td>
<td>கடன் வழங்கும் முகவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,869.38 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 61.19 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 65 சதவீதத்தை பிரதிபலிக்கின்ற மொத்தம் ரூபா 7,634.37 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 39.84 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 05 ஆண்டுகள் கடந்த பின்னர் 2022 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.</td>
<td>ஒதுக்கப்பட்ட மானியத் தொகை மற்றும் அதற்கான செலவுகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன,
<table>
<tr><td></td><td>ஐ.அ.டொ மில்லியன்</td></tr>
<tr><td>ஒதுக்கப்பட்ட மொத்த மானியப் பெறுமதி</td><td>61.19</td></tr>
<tr><td>31/12/2022 இல் உள்ளவாறான செலவுகள்</td><td>39.84</td></tr>
<tr><td>MOF இனால் இரத்து செய்யப்பட்ட ஒதக்கீடுகள்</td><td>10.00</td></tr>
<tr><td>31/12/2022 இல் உள்ளவாறான மீதி</td><td>11.35</td></tr>
</table>
செயற்திட்டக்காலம் 31/12/2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள ஐ.அ.டொலர் 11.35 மீதமுள்ள காலத்திற்குள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.</td>
<td>நிதிப்பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும்.</td>
</tr>
</table>